## புகைப்படம் எடுத்தல் மற்றும் படமாக்கல் கொள்கை

***<u>கொள்கை:</u>***

### பொது மக்கள் மற்றும் செய்தி ஊடகம் மூலம் புகைப்படம் எடுத்தல் மற்றும் படமாக்குதல்

*நூலகம் ஒரு வரையறுக்கப்பட்ட பொது மன்றமாகும். வரையறுக்கப்பட்ட பொது மன்றங்கள் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பொது மக்களுக்கு திறந்திருக்கும் இடங்கள் ஆகும். ஒரு வரையறுக்கப்பட்ட பொது மன்றம் என்ற வகையில், நூலகமானது அதன் நோக்கத்துடன் ஒத்துப்போகும் செயல்பாடுகளை அனுமதிப்பதுடன் அதன் நோக்கத்தை சீர்குலைக்கும் நடவடிக்கைகளைத் தடை செய்யலாம். நூலகத்தைப் பொறுத்தவரை, புத்தகங்கள், நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்லைன் ஆதாரங்களை அணுகி தகவல்களைச் சேகரிப்பது ஆகியவை அனுமதிக்கப்பட்ட செயல்பாடுகளில் அடங்கும். தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகளில், நூலகப் பயனர்களை அல்லது நூலக ஊழியர்களை அவர்களின் விருப்பத்திற்கு மாறாக அல்லது அவர்களின் அனுமதியின்றி படமாக்குதல் அல்லது புகைப்படம் எடுத்தல் போன்ற சீர்குலைக்கும் நடத்தைகள் அடங்கும்.*

*புகைப்படங்கள் அல்லது வீடியோக்களில் யாரும் இல்லாத வரையில், எங்களின் கட்டிடங்கள், பொருட்கள் அல்லது கலைப் படைப்புகளின் தனிப்பட்ட புகைப்படங்களை அல்லது வீடியோக்களை நீங்கள் எடுக்கலாம். அனைவரும் ஒப்புக் கொண்டால், உங்களுக்குத் தெரிந்தவர்களின் தனிப்பட்ட புகைப்படங்கள் அல்லது வீடியோக்களையும் நீங்கள் எடுக்கலாம். நூலகத்தில் உள்ள மற்றவர்களின் வெளிப்படையான அனுமதியின்றி புகைப்படங்கள் அல்லது வீடியோக்கள் எடுக்கப்படக்கூடாது.*

*நூலகத்தின் திட்டங்கள், ஆதாரங்கள், சேகரிப்புகள் மற்றும் சேவைகளை நேரடியாக உள்ளடக்கிய செய்திகளுக்காக செய்தி ஊடகங்கள் மற்றும் பிறர் முன்வைக்கும் படமாக்கல் கோரிக்கைகளை நாங்கள் வரவேற்கிறோம். அனுமதிக்கான கோரிக்கைகள் படப்பிடிப்புத் தேதிக்கு குறைந்தது இரண்டு வாரங்களுக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் marketingteam@aclibrary.org ஊடாக நூலகத்தின் சந்தைப்படுத்தல் மற்றும் தகவல் தொடர்புத் துறைக்கு மின்னஞ்சலில் அனுப்பப்பட வேண்டும்.*

*நூலக உறுப்பினர்களின் நூலகப் பயன்பாட்டை சீர்குலைக்கும் அல்லது ஊழியர்கள் தங்கள் கடமைகளைச் செய்வதைத் தடுக்கும் எந்தவொரு புகைப்படம் எடுத்தலும் அல்லது படப்பிடிப்பும் தடைசெய்யப்பட்டுள்ளது (பாரக்க, கொள்கை 4.01, பொது நடத்தை). நூலக உறுப்பினர்கள் அல்லது நூலக ஊழியர்கள் புகைப்படம் எடுப்பது அல்லது படமாக்கப்பட்டது குறித்து புகாரளித்து, புகைப்படம் அல்லது படம் எடுப்பவரிடம் அதனை நிறுத்துமாறு கேட்கப்பட்ட பிறகும் அவர் நிறுத்த மறுத்தால், அவர் சீர்குலைக்கும் நடத்தையில் ஈடுபட்டு, ஊழியர்களின் நியாயமான உத்தரவுகளைப் பின்பற்றாமல் எங்கள் நடத்தைக் கொள்கையை மீறியவராகக் கருதப்படுவார். இவ்வாறு தொடர்ந்து புறக்கணித்தால், அந்த நபரை நூலகத்தை விட்டு வெளியேறுமாறு நாங்கள் கோரலாம்.*

### நூலகத்தினால் புகைப்படம் எடுத்தல் மற்றும் படமாக்குதல்

*புகைப்படங்கள், வீடியோ மற்றும் பாட்காஸ்ட்கள் மூலம் அலமேடா கவுண்டி நூலகத்தின் நிகழ்ச்சிகள், வகுப்புகள் மற்றும் பட்டறைகளை நூலக ஊழியர்கள் ஆவணப்படுத்தலாம். நூலகத்தின் நிகழ்ச்சிகள், வகுப்புகள் மற்றும் பட்டறைகளில் பங்கேற்கும் உறுப்பினர்கள் புகைப்படம் எடுக்கலாம், வீடியோ பதிவு செய்யலாம் அல்லது ஆடியோ பதிவுகளைச் செய்யலாம். நூலக ஊழியர்கள், நூலகத்தின் இணையதளம், சமூக ஊடகங்கள், வலைப்பதிவுகள் மற்றும் அனைத்து அச்சுப் பொருட்களிலும் உறுப்பினர்களின் ஊடக ஆவணங்களை நூலகத்தின் நிகழ்ச்சிகள் மற்றும்*

*சேவைகளை சந்தைப்படுத்தவும் மேம்படுத்தவும் பயன்படுத்தலாம். உறுப்பினர்களின் அனுமதியின்றி அவர்களின் பெயர்களை விளம்பர ஊடகங்களில் வெளியிடப்படமாட்டாது.*

***<u>வழிகாட்டுதல்கள்/செயல்முறைகள்:</u>***

*நூலக நிகழ்வுகளில் (நிகழ்ச்சி, வகுப்பு, பட்டறை) புகைப்படங்கள், வீடியோ அல்லது ஒலிப்பதிவுகளை எடுப்பதற்கு முன், புகைப்படங்கள், வீடியோ அல்லது ஆடியோ நூலகத்தின் நிகழ்ச்சிகளை விளம்பரப்படுத்தலுக்காக சந்தைக்கு அனுப்பப்படலாம் என்றும், அவை நூலகத்தின் சமூக ஊடக சேனல்கள், இணையதளம் அல்லது அதன் அச்சுப் பொருட்களில் வெளியிடப்படலாம் என்றும் உறுப்பினர்களுக்கு ஊழியர்கள் அறிவிப்பார்கள். உறுப்பினர்கள் புகைப்படம் எடுக்கவோ, வீடியோ பதிவு செய்யவோ அல்லது ஆடியோ பதிவு செய்யவோ விரும்பவில்லை என்றால், ஊழியர்கள் அந்தக் கோரிக்கைகளை மதித்து அந்த உறுப்பினர்களை எந்த ஊடக ஆவணத்திலும் சேர்க்க மாட்டார்கள். இது உறுப்பினர்கள் மற்றும் குடும்பங்களின் தனியுரிமையைப் பாதுகாக்கிறது.*

*பின்வரும் ஊடக அறிவிப்பு நூலக அமைவிடங்களிலும் இணையதளத்திலும் வெளியிடப்படும்.*

***ஊடக அறிவிப்பு***

*நிகழ்ச்சி, நிகழ்வு அல்லது வகுப்பின் போது நீங்கள் புகைப்படம் எடுக்கப்படலாம் அல்லது வீடியோ பதிவு செய்யப்படலாம். நீங்கள் கலந்துகொள்வதன் மூலம், புகைப்படம்/வீடியோ-பதிவு, மற்றும் அலமேடா கவுண்டி நூலகம் மற்றும் அதன் பங்காளிகள் மற்றும் பிரதிநிதிகளால் விளம்பரத்திற்காக படங்களின் ஏதேனும் மறுஉருவாக்கம் அல்லது தழுவல் ஆகியவற்றின் மூலம் கிடைக்கும் உங்கள் மற்றும் உங்கள் குடும்பத்தினரின் படங்களைப் பயன்படுத்த ஒப்புக்கொள்கிறீர்கள். இதில் நேரம் அல்லது அமைவிடம் தொடர்பான வரையறைகள் இன்றி அச்சு, ஆடியோ, டிஜிட்டல், வீடியோ, இணையம் மற்றும் சமூக ஊடகங்கள் ஆகியவை அடங்கும் ஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்பட்டிருக்காது. உங்கள் மற்றும் உங்கள் குடும்ப உறுப்பினர் படங்களைப் பயன்படுத்துவதற்கு ஒப்புதல் அளிப்பதன் மூலம், அந்தப் பயன்பாட்டிற்காக மாவட்டத்தை பாதிப்பு ஏற்படுத்தாமல் இருக்க ஒப்புக்கொள்கிறீர்கள்.*